சுருக்கம்

கோவிட்–19 – ஏப்ரல், மே மற்றும் ஜூன், 2021 ஆகிய மூன்று மாதங்களில் தொடர்பணியில் ஈடுபட்டு வரும் மருத்துவர்கள் மற்றும் பிற பணியாளர்களுக்கு ஊக்கத்தொகை வழங்குதல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் (ப்பி1) துறை

அரசாணை(நிலை) எண்.256

நாள் 28.05.2021
பிலவ, வைகாசி – 14,
திருவள்ளுவர் ஆண்டு 2052

*****

**ஆணை:**

உலக சுகாதார அமைப்பு கோவிட்–19–ஐ ‘பெருந்தொற்று’ என அறிவித்தது. அண்மைக் காலங்களில் உலகளவில் மட்டுமல்லாமல் இந்தியாவில் தமிழ்நாடு உட்பட பல மாநிலங்களில் நோய்த் தொற்று மீண்டும் அதிகரிக்கத் தொடங்கியுள்ளது. தமிழ்நாட்டில் கோவிட் தொற்றின் இரண்டாவது அலை வந்த பிறகு சுகாதாரப் பணியில் ஈடுபட்டு வரும் மருத்துவர்கள், செவிலியர்கள், சுகாதாரப் பணியாளர்கள் மற்றும் பொது சுகாதாரத் துறையில் காய்ச்சல் முகாம் மற்றும் நோய்த் தடுப்பு பிரிவில் பணியாற்றும் பணியாளர்கள் மிகவும் கடுமையாக பணியாற்றி வருகிறார்கள்.

2. கோவிட் பெருந்தொற்று காலத்தில் மருத்துவமனைகளில் நேரடியாக தொற்றாளர்களுடன் இத்தொடர் பணியில் ஈடுபட்டு வரும் ஊழியர்களுக்கு முக்கியத்துவம் அளிக்கும் வகையிலும், ஊக்கமளிக்கும் வகையிலும் அவர்களுக்கு ஊக்கத்தொகை வழங்க வேண்டும் என்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள்.

3. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின் அடிப்படையில், கோவிட் தொடர்புடைய பணியில் தொடர்ந்து ஈடுபட்டு வரும் காலமுறை ஊதியத்துடன் கூடிய அரசுப் பணியாளர்கள், ஒப்பந்த அடிப்படையில் பணிபுரியும் பணியாளர்கள் மற்றும் அரசு மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் கீழ் பணியாற்றி வரும் பணியாளர்களுக்கு கீழ்கண்டவாறு ஊக்கத்தொகை வழங்க அரசால் முடிவெடுக்கப்பட்டு, அவ்வாறே அரசு ஆணையிடுகிறது:-

| | | | |
|---|---|---|---|
| 1. | ஆங்கில முறை மருத்துவர்கள் மற்றும் இந்திய முறை (AYUSH) மருத்துவர்கள் | : | ரூ.30,000/– |
| 2. | முதுநிலை மருத்துவ மாணவர்கள் | : | ரூ.20,000/– |
| 3. | பயிற்சி மருத்துவர்கள் | : | ரூ.15,000/– |
| 4. | செவிலியர்கள் | : | ரூ.20,000/– |
| 5. | கிராம மற்றும் பகுதி சுகாதார செவிலியர், 108 அவசர ஊர்தி பணியாளர்கள், 104 அமரர் ஊர்தி பணியாளர்கள், சுகாதார மேற்பார்வையாளர்கள், வட்டார சுகாதார மேற்பார்வையாளர்கள் மற்றும் அவருக்கு இணையான பணியாளர்கள் உள்ளிட்ட மருத்துவம் சாரா பணியாளர்கள் (Para Medical) | : | ரூ.15,000/– |

| | | | |
|---|---|---|---|
| 6. | புற ஆதார முறையில் பணியமர்த்தப்பட்டோர் உள்ளிட்ட தூய்மைப் பணியாளர்கள் | : | ரூ.15,000/– |

4. அரசு மருத்துவமனைகளில் பணியாற்றிவரும் மருத்துவர்கள், செவிலியர்கள், தூய்மைப் பணியாளர்கள், ஆய்வுக்கூடப் பணியாளர்கள், சி.டி.ஸ்கேன் பணியாளர்கள், அவசர மருத்துவ ஊர்திப் பணியாளர்கள் உள்ளிட்ட பணியாளர்கள், கொரோனா தொற்றுக்கான சிகிச்சை மற்றும் அச்சிகிச்சை சார்ந்த பணிகளான கோவிட் கவனிப்பு மையம், கோவிட் நல மையம், நோய்க் கட்டுப்பாட்டு பகுதி, காய்ச்சல் முகாம்கள், பரிசோதனை மாதிரி சேகரிப்பு மையங்கள் (Test Samples Collection Centre) நுண்ணுயிரியல், RT-PCR ஆய்வகங்கள் உள்ளிட்ட மையங்களில் பணிபுரியும் பணியாளர்கள் மற்றும் கொரோனா கட்டுப்பாட்டு அறைகளில் பணிபுரிபவர்களுள், கோவிட் பெருந்தொற்று காலத்தில், நேரடியாக தொற்றாளர்களுடன் இத்தொடர் பணியில் ஈடுபட்டு வரும், தகுதிவாய்ந்த நபர்களை இனம் கண்டு, மேலே பத்தி 3ல் சொல்லப்பட்டுள்ளவாறு நிதித்தொகுப்பு வழங்க அந்தந்த் துறை இயக்குநர்களுக்கு அதிகாரம் வழங்கி ஆணையிடப்படுகிறது.

5. மேலே பத்தி 3ல் சொல்லப்பட்டுள்ளவாறு தகுதியுடைய பணியாளர்களுக்கு நிதித்தொகுப்பு வழங்குவதற்கு தேவைப்படும் நிதியினைப் பெறுவதற்கான கருத்துருக்களையும், 2021–22ஆம் ஆண்டிற்கான துணைநிலை மதிப்பீடுகளில் அவற்றைச் சேர்ப்பதற்கு தேவையான விளக்கக் குறிப்புகளையும், அந்தந்த துறை இயக்குநர்கள் அளவிலேயே நேரடியாக நிதித் துறைக்கு அனுப்பி, நிதி ஒப்புதலைப் பெற்றுக் கொள்ளுமாறு தொடர்புடைய துறை இயக்குநர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

6. இந்த அரசாணை நிதித் துறையின் அ.சா.கு எண்.106/SS/PK)/Health-II/2021, நாள் 28.05.2021–இல் பெற்ற இசைவுடன் வெளியிடப்படுகிறது.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

ஜெ.ராதாகிருஷ்ணன்,
அரசு முதன்மைச் செயலாளர்

<u>பெறுநர்</u>
திட்ட இயக்குநர், தமிழ்நாடு சுகாதாரத் திட்டம், சென்னை–6.
குழும இயக்குநர், தேசிய நலக் குழுமம், சென்னை–6.
இயக்குநர், மருத்துவம் மற்றும் ஊரக நலப் பணிகள் இயக்குநரகம், சென்னை–6.
மருத்துவக் கல்வி இயக்குநர், சென்னை – 10.
இயக்குநர், பொது சுகாதாரம் மற்றும் நோய்த் தடுப்பு மருந்துத் துறை, சென்னை–6.
இயக்குநர், இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதித் துறை, சென்னை–106
மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு மருத்துவ சேவை கழகம், சென்னை–8.
ஆணையர், பெருநகர சென்னை மாநகராட்சி, சென்னை–3.
ஆணையர், நகராட்சி நிர்வாக ஆணையரகம், சென்னை–4.
இயக்குநர், பேரூராட்சிகள் இயக்குநரகம், சென்னை–4
அனைத்து மாவட்ட ஆட்சியர்கள்.
மாநில கணக்காயர், சென்னை – 18.
மாநில கணக்காயர் (தணிக்கை), சென்னை – 18.
கருவூல கணக்கு அலுவலர் (தெற்கு), சென்னை–35.
முதல்வர், அனைத்து மருத்துவக் கல்லூரிகள்.
அனைத்து இணை இயக்குநர்கள், மருத்துவம் மற்றும் ஊரக நலப் பணிகள்.
**<u>நகல்:</u>**
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, சென்னை–9.
ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை, சென்னை – 9.

சிறப்பு நேர்முக உதவியாளர், மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம், சென்னை–9
சிறப்பு நேர்முக உதவியாளர், மாண்புமிகு நிதி அமைச்சர் அலுவலகம், சென்னை–9
சிறப்பு நேர்முக உதவியாளர்,
மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அலுவலகம்,
சென்னை–9.
தலைமைச் செயலாளரின் முதன்மை தனிச் செயலாளர், சென்னை–9.
கூடுதல் தலைமைச் செயலாளரின் (நிதி), முதன்மை தனிச் செயலாளர், சென்னை–9.
நிதி (சுகாதாரம்–2) துறை, சென்னை–9.
அனைத்து தலைமைச் செயலகத்துறைகள், சென்னை–9.
மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் (தகவுப் பிரிவு / அனைத்து பிரிவுகள்) துறை,
சென்னை – 9.
இருப்பு கோப்பு / உதிரி நகல்

**(ஆணைப்படி அனுப்பப்படுகிறது)**

பிரிவு அலுவலர்
28/5/21